# II Semester B.B.A./B.H.M./B.C.A./B.S.W. Examination, September/October 2022
## (NEP – 2021-22 and Onwards)
## TAMIL LANGUAGE (Part – I) (Paper – II)

Time : 2½ Hours Max. Marks : 60

### SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) சீவகன் இத்தனை பெண்களை மணந்தான்
   1) மூவர் 2) ஐவர் 3) எழுவர் 4) எண்மர்

2) சீறாப் புராணத்தில் உள்ள காண்டங்கள்
   1) மூன்று 2) ஐந்து 3) ஏழு 4) எட்டு

3) வில்லிபாரதத்தின் ஆசிரியர்
   1) கம்பர் 2) திருத்தக்க தேவர்
   3) வில்லிபுத்தூரார் 4) பரஞ்சோதியார்

4) தமிழில் உள்ள சொற்கள் இலக்கண வகையில் ________ வகைப்படும்.
   1) நான்கு 2) ஐந்து 3) எட்டு 4) பத்து

5) 'தந்தை' என்ற சிறுகதையின் ஆசிரியர்
   1) வைரமுத்து 2) அய்க்கண்
   3) பா. சந்திர சேகர் 4) க. சங்கர்

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. (5×3=15)

1) வந்த அந்தணன் கவச குண்டலங்களை வாங்கி நீவழங்கு எனக்கு என்ன
   தந்தனன் பெறுக என் அவன் வழங்க விண்தலத்தில் ஓர்தனி அசரீரி

2) காற்றின் விரைந்து தொறு மீட்க எனக் காவல் மன்னன்
   ஏற்றை அரிமான் இடிபோல இயம்பினானே

3) வெம்முனை வேட்டுவர் உய்த்தனரோ எனத்
   தம்மனைக் கன்றொடு தாம்புலம்பு உற்றார்

4) இல்லிடைப் புகுத்தப் பூவின் இடத்தினில் உதித்த கோவே
   யொல்லையின் எனது சொற்கேட்டு வந்தருள் அளிக்க வேண்டும்

5) மிதவை அம்பேழை தன்னில் பொதிந்து நீவிட அப்போதுஅ
   நதியும் அமகவை கங்கை நதியிடை படுத்தது அன்றே

P.T.O.

6) கொஞ்சம் அசட்டை காரணமாகவோ, வயதாகிவிட்ட தடுமாற்றம் காரணமாகவோ கொதித்த ரசத்தை இறக்கி வைக்கப் போனார். கையை நன்றாகச் சுட்டுக் கொண்டு விட்டார்

7) சுத்தமில்லாத டாய்லெட்டை பயன்படுத்துவது தான் காரண மென்றோ, நாளடைவில் இந்த இன்பெஷன் கர்ப்பபைக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையோ அந்த டாக்டர் சொல்லவில்லை

8) இரண்டு இளம் பெண்மருத்துவர்கள் லேட்டஸ்ட் ஆங்கிலப் படம் பற்றி பேசிக் கொண்டே சென்றனர்

## SECTION – B

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) இயற்சொல், திரிசொல்-இவற்றை எடுத்துக்காட்டுடன் கூறுக.

2) வேற்றுமைத் தொகை, வினைத்தொகை-இவற்றைச் சான்றுடன் விளக்குக.

3) எதிர்மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்-இவற்றை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

4) உரிச் சொல்லின் வகைகளைச் சான்றுடன் கூறுக.

5) கண்ணன் தூது சென்றதற்கான காரணங்கள் யாவை ?

6) பெண்மான், தனது ஆண்மானையும் குட்டியையும் பிரிந்ததற்கான காரணத்தை எழுதுக.

7) 'மேன்மக்கள்'-சிறுகதையில் மெய்யப்ப செட்டியாரின் குணநலன்கள் குறித்து எழுதுக.

8) 'கானல் நீர் கனவுகள்' சிறுகதை சித்தரிக்கும் பெண்களின் அவலநிலை குறித்து எழுதுக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×5=20)**

1) நந்தகோன், தன்மகளைச் சீவகனுக்கு மணமுடிக்க மேற்கொண்ட முயற்சிகள் யாவை ?

2) நபிகள் நாயகத்தின் வேண்டுகோளை ஏற்ற வேடன், கூறியவை யாவை ?

3) கண்ணனுக்கு எதிராக சகுனி செய்த சூழ்ச்சியை விளக்குக.

4) 'அழுக்கு' என்ற தலைப்பு, இக் கதைக்கு எவ்வாறு பொருந்துகிறது ?

5) 'ஊர்மிளை' – என்னும் சிறுகதை புலப்படுத்தும் பெண்ணின் மன உணர்வு களைக் காட்சிப்படுத்துக.

6) 'புத்தருக்கும் அடிசறுக்கும்' என்ற கதையின் கருவை விளக்கி வரைக.

---